காலை முரசு

பக்கங்கள் 20

## அத்தியாவசிய பொருட்களின் விலை குறைப்பு

லங்கா சதொச நிறுவனத்தால் 4 அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, 400 கிராம் பால்மா 04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மாசி 25 சனிக்கிழமை 09.03.2024 அதிர்வு 221






# வெடுக்குநாறிமலை கோயிலுக்குள் புகுந்து பொலிஸார் வெறியாட்டம்!

- சிவராத்திரி வழிபாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தமிழர்கள் குண்டுக்கட்டாகத் தூக்கி வெளியேற்றம்
- கஜேந்திரன் எம்.பி. மீதும் தாக்குதல்
- ஆலய நிர்வாகிகள், பூசகர் உட்பட 8 பேர் கைது



(கே.வசந்தன், ந.லோகதயாளன்)

வவுனியா வடக்கு, நெடுங்கேணி வெடுக்குநாறிமலை ஆதிசிவன் கோயிலில் நேற்று மகா சிவராத்திரி வழிபாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தமிழர்கள், பொலிஸாரால் கடுமையாகத் தாக்கப்பட்டு குண்டுக்கட்டாகத் தூக்கி வெளியேற்றப்பட்டனர்.

இராணுவத்தினர், விசேட அதிரடிப் படையினர் என ஆயுதம் தாங்கிய படையினர் வெடுக்குநாறிமலையில் குவிக்கப்பட்டு பௌத்த பிக்குகள் சூழ்ந்து நிற்க பொலிஸாரின் அராஜகம் அரங்கேற்றப்பட்டது. 04

## நிர்வாக சேவை விசேட தரத்துக்கான நேர்முகத் தேர்வுக்கு 54 பேர் அழைப்பு

### - 9 பேர் மாத்திரமே தமிழர்கள்

(ந.லோகதயாளன்)

நிர்வாக சேவை விசேட தரத்துக்கு 44 அதிகாரிகளைத் தேர்வு செய்வதற்காக எதிர்வரும் 13ஆம் திகதி நேர்முகத் தேர்வு நடைபெறவுள்ளது.

இந்த நேர்முகத் தேர்வுக்குத் தற்போது நிர்வாக சேவை தரம் 1 இல் உள்ள 54 பேர் அழைக்கப்பட்டுள்ளனர். அதில் 9 பேர் மட்டுமே தமிழர்களாவர். அவர்களில் 6 பேர் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களாவர்.

வடக்கு மாகாணத்தில் இருந்து பிரணவநாதன், எழிலரசி, குகநாதன், பற்றிக்ரஞ்சன், நந்தகோபன், திருமதி ஜெலதீபன் ஆகியோர் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.




நேற்று 'மாலை முரசு' வெளியான சற்று நேரத்தில் வெளிநாட்டில் இருந்தும் உள்நாட்டிலிருந்தும் மூன்று, நான்கு அழைப்புகள் மாறி மாறி வந்தன.

'ஐ.எம்.எவ். பிரதிநிதிகளுடன் கலந்துரையாட எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்கு வாய்ப்பு திங்கள் சந்திப்புக்கு சஜித்,அனுரா, 02

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally



# திருக்கேதீஸ்வர ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்ற மகா சிவராத்திரி நிகழ்வு

(மன்னார் நிருபர்)

வரலாற்றுப் புகழ் பெற்ற மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் மகா சிவராத்திரி நிகழ்வு நேற்று சிறப்பாக இடம்பெற்றது. இதில் இலட்சக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

உலகம் முழுவதும் இருந்து வருகை தந்த சிவ பக்தர்கள் மன்னார் பாலாவியில் நீராடி பாலாவித் தீர்த்த நீரை திருக்கேதீஸ்வர ஆலயத்தினுள் உள்ள மகா சிவலிங்கத்துக்கு நீர்வார்த்து நெய் விளக்கு ஏற்றி வேண்டுதல்கள் மற்றும் நேர்த்திக்கடனைச் செலுத்தினர்.

அத்துடன் சிவராத்திரி நிகழ்வுகளை முன்னிட்டு திருக்கேதீஸ்வர திருப்பணி சபையின் ஏற்பாட்டில் பல்வேறு பட்ட இந்து கலாசார நிகழ்வுகளும், அறநெறி சொற்பொழிவு நிகழ்வுகளும் நடைபெற்றன.

இலங்கை மற்றும் ஏனைய நாடுகளிலிருந்து பல இலட்சக்கணக்கான பக்தர்கள் நேற்றைய சிவராத்திரி நிகழ்வில் கலந்துகொண்டார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

















# முகேஷ் அம்பானியின் வீட்டுத் திருமண வரவேற்பில் உணவு தயாரித்த இலங்கைச் சமையல் கலைஞர்கள்




இந்தியாவின் முதன்மை கோடீஸ்வர தொழிலதிபரான முகேஷ் அம்பானியின் இளைய மகன், ஆனந்த் அம்பானியின் திருமண வரவேற்பு விழாவுக்கு உணவு தயாரிப்பதற்காக இலங்கையில் இருந்து சென்ற 13 சமையல் கலைஞர்கள் மீண்டும் நாடு திரும்பியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் அவர்கள் 13 பேரும் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்திற்கு வந்திறங்கியுள்ளனர்.

இந்த 13 சமையல்காரர்களும் தங்களது உணவகங்களில் இலங்கை உணவுகளை நவீன முறைகளில் தயாரித்துப் பரிமாறியுள்ளனர்.

இவர்களின் உணவுகளை உட்கொண்ட வாடிக்கையாளர்கள் கூறிய கருத்துக்கள், கூகுள் மதிப்புரைகள் மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையிலேயே இந்த 13 பேரும் அம்பானி வீட்டு விசேஷத்தில் சமைப்பதற்காக அழைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களுக்கு கடந்த மார்ச் 3 ஆம் திகதியன்று திருமண வரவேற்பில் கலந்துகொள்ளும் விருந்தினர்களுக்கு மதிய உணவு தயாரிக்க வாய்ப்பு வழங்கப்பட்டது.

அவர்கள் தயாரித்த உணவுக்கு விருந்தினர்களிடம் இருந்து கிடைத்த பதில் மற்றும் பாராட்டுக்களின் அடிப்படையில், அவர்களுக்கு மார்ச் 3 மற்றும் 4 ஆம் திகதிகளின் இரவு உணவை ஏற்பாடு செய்யும் பொறுப்பும் வழங்கப்பட்டது.

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் ஜாம் நகரில் உள்ள அம்பானிக்கு சொந்தமான தனியார் உயிரியல் பூங்காவிலேயே இந்தத் திருமண வரவேற்பு விழா நடைபெற்றுள்ளது.

இந்த திருமண விழாவிற்கு இலங்கை சமையல் கலைஞர்கள் தவிர இங்கிலாந்து, துபாய், சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த சமையல் கலைஞர்களும் அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இரகசியம் பரகசியம்...

சிறீதரனுக்கு ஜனாதிபதி அழைப்பு' – என்ற தலைப்பில் வெளியான முதலாம் பக்கத்தின் பிரதான செய்தி குறித்துத்தான் விசனம், விசாரிப்புகள் எல்லாம்.

"அப்படி என்றால் தமிழர் தரப்பில் சிறீதரனுடன்தான் இந்தப் பிரச்சினைகள் பற்றி எல்லாம் இனி விடயங்களை ஜனாதிபதி கையாளப் போகின்றாரா?" – என்று கேட்டார் ஓர் அன்பர். எனையோரின் கேள்விகளும் அந்தப் பாணியில்தான் இருந்தன.

நான் எனக்குத் தெரிந்த மூன்று விடயங்களை அவர்களிடம் முதலில் கூறினேன்.

முதலாவது – இந்த விடயத்தை ஒட்டி ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு வெளியிட்ட செய்தியைத்தான் நாங்கள் அப்படியே பிரசுரித்தோம். அதில் நாங்கள் கை,கால் வைத்து எதுவும் எழுதவும் இல்லை, சேர்க்கவும் இல்லை. நீங்கள் குறிப்பிடுகின்ற கேள்விதான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினுடைய நிலைப்பாடு என்றால் அது பற்றி அவரிடம்தான் கேட்க வேண்டும்.

அடுத்தது – தமிழரசு விடயம் வழக்குக்குச் சென்று இருந்தாலும், கட்சியின் தலைவராக அதன் பொதுக்குழுவாக இதுவரை குறிப்பிடப்பட்ட அமைப்பால் சிறீதரனே தேர்வு செய்யப்பட்டிருக்கின்றார். அதையும் தாம் ஏற்கின்றார் என்று அவருடன் தேர்தலில் போட்டியிட்ட சுமந்திரனும் சேர்ந்து அறிவித்திருக்கின்றார். அப்படி இருக்கும்போது சிறீதரனுக்கான ஜனாதிபதியின் அழைப்பை எப்படித் தவறு என்றோ, பிழை என்றோ கூற முடியும்?

மூன்றாவது – கட்சித் தலைவர் தேவையானால் இது விடயத்தில் தமக்கு உதவியாளர்களை இக்கூட்டத்துக்குக் கூட்டிச் செல்ல முடியும் என்றும் அறிவிக்கப்பட்டு இருக்கின்றமையினால் சிறீதரன் தமக்குத் தேவையான – விடயம், விவகாரம் தெரிந்த,புரிந்த ஒருவரையோ, இருவரையோ கூட்டத்துக்குத் தம்முடன் உதவிக்குக் கூட்டிச் செல்லலாம்தானே...! தேவையானால் அவர் சுமந்திரனைக் கூடத் தமக்கு உதவியாகக் கூட்டிச் செல்ல முடியுமே. சம்பந்தர் அடிக்கடி கூட்டிச் செல்கின்றமையைப் போல. –

என்று மூன்று விடயங்களை அவர்களுக்கு விளக்கினேன்.

அதற்குப் பின்னர் நான்காவதாக எனக்குத் தெரிந்த ஒரு தகவலையும் அவர்களுக்குச் சொல்லி வைத்தேன். அதனையும் என் வாசகர்களுக்காக இங்கு தருகிறேன்.

இந்தக் கூட்டத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டுதல்படி ஏற்கனவே சுமந்திரனுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டு விட்டது. சுமந்திரன் அதில் பங்கு பற்றுவதை உறுதிப்படுத்தும்படி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே பணித்தமையால் அது குறித்து சுமந்திரனுடன் பேசி, அவரின் பங்குபற்றுதலை ஜனாதிபதிக்கு உறுதிப்படுத்தி இருக்கின்றனர் ஜனாதிபதியின் பணியாள் தொகுதியினர் என்பதையும் நான் அறிந்திருந்தேன்.

சுமந்திரனையும் கட்டாயம் பங்கு பற்ற வேண்டுமென அழைத்து, அவரின் பங்கு பற்றுதலையும் உறுதிப்படுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இவ்விடயத்தை ஒட்டித் தமது ஊடகப் பிரிவு வெளியிட்ட அறிவிப்பில் சுமந்திரனின் பெயர் இடம்பெறாமல் பார்த்துக் கொண்டமையை அவரே தானே திட்டமிட்டு செய்தாரா அல்லது தவறுதலாக அது நடந்ததா என்பது எனக்குத் தெரியவில்லை.

எதிர்க்கட்சிகளின் தலைவர்களுக்குதான் அழைப்பு என்றால் – அந்த வரிசையில் சஜித், அநுர குமாரவுடன் தமிழரசின் சார்பில் சிறீதரனுக்குத்தான் அழைப்பு என்றால் – பிறகு எதற்கு சுமந்திரனுக்கும் தனியாக அழைப்பு..?

எனக்கு விளங்கவில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம்தான் இது பற்றிய உள்சூக்குமம் குறித்துக் கேட்க வேண்டும்.

### அத்தியாவசிய...

பொதி ஒன்றின் விலை 125 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 935 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 1,190 ரூபாவாக இருந்த ஒரு கிலோ காய்ந்த மிளகாயின் விலை 15 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன்படி, அதன் புதிய விலை 1,175 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளை அரிசி ஒரு கிலோவின் விலை 5 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 195 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளை சீனியின் விலை 3 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 272 ரூபாவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# வெடுக்குநாறிமலை கோயிலுக்குள் புகுந்து பொலிஸார் வெறியாட்டம்!



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோயில் நிர்வாகிகள், பூசகர், அரசியல் செயற்பாட்டாளர்கள், பிரதேச இளைஞர்கள் என 8 பேரைப் பொலிஸார் கைது செய்தனர்.

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் கோயிலில் நேற்று மகா சிவராத்திரி வழிபாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்களை மாலை 6 மணிக்கு அங்கிருந்து வெளியேறுமாறு பொலிஸார் அறிவித்ததைத் தொடர்ந்து பதற்றம் ஏற்பட்டது.

கோயிலுக்குள் துப்பாக்கிகள், பொல்லுகள் தாங்கியவாறு சப்பாத்து அணிந்து உள்நுழைந்த பொலிஸார், வழிபாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்களைப் பலாத்காரமாக - குண்டுக்கட்டாகத் தூக்கி வெளியே கொண்டு சென்றனர்.

இதன்போது மிகவும் மோசமாக ஆலயத்துக்கு மரபு ரீதியில் வேட்டி அணிந்து வந்த இருவரின் வேட்டிகள் முழுமையாகப் பொலிஸாரால் உருவி எடுக்கப்பட்டன.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மீதும் பொலிஸார் தாக்கினர். அவரையும் குண்டுக்கட்டாக தூக்கிச் சென்ற பொலிஸார், வாகனத்தின் முன்னால் போட்டு விட்டுச் சென்றனர்.

கோயிலில் அன்னதானத்துக்காகத் தயாராகிக் கொண்டிருந்த உணவுப் பொருட்களையும் பொலிஸார் பறித்தனர். கோயிலில் இருந்து அனைவரும் வெளியேற்றப்பட்டனர்.

கோயில் நிர்வாகிகள், பூசகர், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளர், பொதுமக்கள் என 8 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் நெடுங்கேணிப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.எ












# பெண்களின் உரிமைகளை வென்றெடுப்பது வெறும் பேச்சில் மட்டும் நின்றுவிடக் கூடாது!

## சர்வதேச மகளிர் தின தேசிய விழாவில் ஜனாதிபதி தெரிவிப்பு

ஆண், பெண் சமூக சமத்துவம் மற்றும் பெண்களை வலுவூட்டுவதற்கான சட்டமூலங்கள் இரண்டும் எதிர்வரும் மே மாதம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பெண்களை வலுவூட்டுவதற்கான சட்டத்தின் பிரகாரம் தனியான ஆணைக்குழுவொன்றை ஸ்தாபிக்க எதிர்பார்த்துள்ளதாகவும், அரசமைப்பின்படி பெண்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொறிமுறையை அறிமுகப்படுத்துவதன் மூலம் பெண்களின் முன்னேற்றத்திற்கும் வலுவூட்டலுக்குமான ஏற்பாடுகளை மேற்கொள்வதே இதன் நோக்கமாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பத்தரமுல்ல வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் நேற்று நடைபெற்ற சர்வதேச மகளிர் தின தேசிய கொண்டாட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் கூறினார்.

பெண்கள் வலுவூட்டல் சட்டமூலம் நேற்றுமுன்தினம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டது என்றும், ஆண், பெண் சமூக சமத்துவ சட்டமூலம் எதிர்வரும் வாரத்தில் வர்த்தமானியில் வெளியிடப்படும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மேலும், ஆண், பெண் சமூக அடிப்படையைக் கொண்ட வரவு – செலவுத் திட்டத்தை எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும், இது ஆசியாவிலேயே முதன்முறையாக முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் உள்ள ஒவ்வொரு பொலிஸ் நிலையத்திலும் பெண்கள் மற்றும் சிறுவர் விவகாரப் பிரிவு ஸ்தாபிக்கப்படும் என்றும், அதற்காக பொலிஸ் உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளிக்கப்படும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

இதுவரையில் எமது நாட்டில் மகளிர் தினக் கொண்டாட்டங்கள் பெண்களின் உரிமைகள் பற்றி பேசுவதாக மாத்திரமே இருந்த போதிலும், பெண்களின் உரிமைகள் பேச்சளவில் மாத்திரம் இருக்கக் கூடாது என்று வலியுறுத்திய ஜனாதிபதி, அதற்காக அரசு தற்போது தேவையான சட்டங்கள் மற்றும் விதிமுறைகளைக் கொண்டு வர நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.




இந்த விடயங்கள் அனைத்தையும் தேசியப் பொறுப்பாகக் கருதி நாடு முழுவதிலும் உள்ள பெண்களுக்கு தெளிவூட்டுமாறு வேண்டுகோள் விடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவ்வாறு அல்லாமல் இந்தச் சட்டங்கள் விதிமுறைகளைக் கொண்டு வருவது மாத்திரம் போதுமானதாக இருக்காது என்றும் குறிப்பிட்டார்.

2024 ஆம் ஆண்டுக்கான சர்வதேச மகளிர் தினத் தேசிய கொண்டாட்டம் “அவளுக்கான பலம் – நாட்டுக்கான முன்னேற்றம்” என்ற தொனிப்பொருளில் பெருமையுடன் நடைபெற்றதுடன், நாடளாவிய ரீதியில் இருந்து பெண்கள் அமைப்புகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பெருமளவான பெண்கள் இதில் கலந்துகொண்டனர்.

தற்காலிக பெண்கள் பராமரிப்பு நிலையங்களுக்கான வழிகாட்டுதல்கள் மற்றும் பெண்கள் பணி அமைப்புக்கள் மற்றும் பெண்கள் அதிகார சபைகளின் யாப்பு என்பன, பெண்கள் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்கவினால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டன.

தற்காலிக பெண்கள் பராமரிப்பு நிலையங்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியின் கீழ் ஓட்டோக்கள், கணினிகள், அச்சு இயந்திரங்கள் என்பனவும் இதன்போது அடையாள ரீதியில் வழங்கிவைக்கப்பட்டன.

அழகுக் கலை சார்ந்த கற்கைகளுக்கும் புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

ஒழுங்குபடுத்தப்படாத துறைகளில் இருந்து பெறப்படும் நுண் நிதிக் கடன்களின் சுமையிலிருந்து விடுபடுவதற்காக வழங்கப்படும் “லிய சவிய” கடன் திட்டத்தின் கீழ் கடன் வழங்கும் நிகழ்வும் அடையாள ரீதியில் இங்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மேலும், பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் ஏற்பாட்டின் கீழ், நீர்கொழும்பு, போலவலான, குட் ஷெப்பர்ட் கான்வென்ட் நடத்திய தாதியர் பராமரிப்பு சேவை தொழில்முறை பயிற்சிநெறியை வெற்றிகரமாக முடித்த இளம் பெண்களுக்கு சான்றிதழ்களும் இதன்போது வழங்கப்பட்டன.

களனிப் பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளரும் ஆண், பெண் சமூக சமத்துவக் கற்கை மையத்தின் பணிப்பாளருமான கலாநிதி அனுஷா எதிரிசிங்க இங்கு அதிதிகள் உரையை வழங்கினார்.

அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த், பவித்ரா வன்னியாரச்சி, மனுஷ நாணயக்கார, இராஜாங்க அமைச்சர்களான அனுப பஸ்குவல், சீதா அறம்பேபொல, நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, கொழும்பு முன்னாள் மேயர், உள்ளூராட்சி விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் ஆலோசகர் ரோசி சேனாநாயக்க, வெளிநாட்டுத் தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள், அரச மற்றும் அரசு சாரா பிரதிநிதிகள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அமைப்புகளின் பிரதிநிதிகள், நாடளாவிய ரீதியில் இருந்து பெண்கள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# வெடுக்குநாறிமலைக்குக் குடிதண்ணீர் வழங்க மறுத்த பொலிஸார் பலமணி நேரப் போராட்டத்தின் பின் வந்த உழவு இயந்திரம் விபத்து

## கஜேந்திரன் எம்.பி. உள்ளிட்ட மூவர் காயம்

(கே.வசந்தன்)

வவுனியா வடக்கு, வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் வருகை தந்த மக்களுக்கு குடிதண்ணீர் வழங்க பொலிஸார் மறுப்புத் தெரிவித்தமையால் அங்கு பொலிஸாருக்கும், பக்தர்களுக்கும் இடையில் பதற்ற நிலை ஏற்பட்டிருந்தது.

வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலயத்தின் சிவராத்திரி வழிபாடுகள் காலை முதல் இடம்பெற்று வந்திருந்தது. இதன்போது காலை முதல் வீதி தடைகளைப் போட்டிருந்த பொலிஸார் ஆலய வளாகத்துக்குள் குடிதண்ணீர் எடுத்துச் செல்ல இடையூறு ஏற்படுத்தியிருந்தனர்.

ஆலயத்துக்குக் கொண்டு வரப்பட்ட குடிதண்ணீர் தாங்கி பொலிஸாரால் 3 கிலோமீற்றருக்கு முன்னரே தடுத்து நிறுத்தப்பட்டிருந்தது. இதையடுத்து குடிதண்ணீர் இன்றி அவதிப்பட்ட சிறுவர்கள், பக்தர்களுக்காக அருகில் உள்ள ஆற்றில் இருந்து நீர் பெற்ற போதும் அதனையும் பொலிஸார் தடுத்து நிறுத்தினர்.

இதனால் குடிதண்ணீர் இன்றி மக்கள் அவதிப்பட்ட நிலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் பீற்றர் இளஞ்செழியன் மற்றும் ஆலய பக்தர்கள் குடிதண்ணீர் தாங்கியுடன் வந்த உழவு இயந்திரத்தை ஆலயத்துக்குள் விடுமாறு பொலிஸாருடன் தர்க்கத்தல் ஈடுபட்டனர். சுமார் அரை மணி நேரம் குடிதண்ணீரை விடுமாறு போராட்டத்திலும் ஈடுபட்டனர். இதனையடுத்து மாலை மூன்று மணியளவில் குடிதண்ணீரை வழங்க பொலிஸார் இணங்கினர்.

இதன்போது குடிதண்ணீருடன் உழவு இயந்திரம் வருகை தந்த போது குறித்த வாகனம் காட்டுப் பகுதியில் தடம்புரண்டு விபத்துக்குள்ளானபோது அதில் பயணித்த நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட 3 பேர் காயமடைந்தனர். அவர்களில் ஒருவர் நெடுங்கேணி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இவ்வாறான நெருக்கடிகளுக்கு மத்தியில் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட குடிதண்ணீரையும் பொலிஸார் மாலை 6 மணியளவில் குடிதண்ணீர் தாங்கியை திறந்து வெளியேற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## நாறுகிறது பேரினவாத வெடுக்கு

'படிப்பது தேவாரம், இடிப்பது சிவன் கோவில்' என்பார்கள். அப்படித்தான் நடந்து கொள்கின்றன இலங்கையின் பௌத்த - சிங்களப் பேரினவாதமும் அதே போக்கில் ஊறிய அரசாங்கமும்.

நாட்டு மக்களுக்கு உபதேசிப்பதோ புத்தரின்பஞ்சசீலங்கள். ஆனால்நாட்டின்சிறுபான்மையினருக்கு - குறிப்பாக தமிழர்களுக்கு - எதிராகக் கட்டவிழ்த்து விடுவதோ பஞ்சமா பாதகங்கள்.

இதுதான் பேரினவாதத்தின் ஒரே வெறிப் போக்காக இருந்து வருகின்றது.

இலங்கை தீவில், தமிழர் தேசத்தின் தனித்துவத்தையும், தாயகத்தையும், அதன் இருப்பையும் அழித்தொழித்து, இல்லாமலாக்குவதற்குக் கங்கணம் கட்டி நிற்கும் பேரினவாத அரசும், அதன் கட்டமைப்புகளும் அந்த அடாவடித்தனத்தைத் தமது ஒவ்வொரு செயலிலும் நடவடிக்கையிலும் நிரூபித்து செயல்படுத்தி வருகின்றன.

தமிழர்களின் பாரம்பரிய வழிபாட்டிடமான வெடுக்குநாறிமலை ஆதி சிவன் கோவிலில் மகா சிவராத்திரி தினமான நேற்று முன்னிரவில் அரங்கேறிய அராஜகமும் அதே பேரினவாத வெறியாட்ட வடிவம்தான்.

மகா சிவராத்திரி தினத்தையொட்டி தமிழ் சைவர்களின் வழிபாட்டு உரிமைகளை பேரினவாதமும், அதை முன்னெடுக்கும் தென்னிலங்கை பௌத்த - சிங்கள பேரினவாத அரசும் நேற்று சூறையாடி இல்லாதொழித்து, மறுத்திருக்கின்றன.

தெற்கில் காவி உடை தரித்த பிக்குகள் புத்தரின் பஞ்சசீல உபதேசம் செய்வதுபோல, நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மகா சிவராத்திரியை ஒட்டி நல்லிணக்கம் குறித்து நல்லுபதேசம் செய்கின்றார்.

அதேசமயம் அந்த பிக்குகளின் சகாக்கள் வடக்குக் கிழக்கு தமிழர் தாயகத்தில் தமிழ் மக்களின் வரலாற்று பாரம்பரிய மத இடங்களை அடாவடித்தனம் பண்ணி, அட்டகாசம் புரிந்து, சூறையாடி, ஆக்கிரமித்து வருகின்றனர்.

அதுபோல ஜனாதிபதியின் நேரடி கட்டுப்பாட்டில் இயங்கும் பொலிஸும் படைகளும் தம்பாட்டுக்கு அதே வெறியாட்டத்தை முன்னின்று மேற்கொள்கின்றன.

பஞ்சசீலம் உபதேசித்துக் கொண்டு, பஞ்சமா பாதகம் போன்று அடாவடித்தனம் பண்ணுவதுதான் தென்னிலங்கை அதிகார பீடத்தினதும் பௌத்த - சிங்கள பேரினவாதத்தினதும் பரவணிப் பண்பியல்புகள். அதன் ஒரு கொடூர முகத்தையே நேற்று மாலை வெடுக்குநாறிமலையில் மீண்டும் ஒரு தடவை நேரில் அவதியோடு அனுபவித்து எதிர்கொண்டோம்.

"அனைத்து உயிர்களையும் துன்பத்திலிருந்து விடுவிக்க, உலகெங்கிலும் உள்ள இந்து பக்தர்களினால், சிவபெருமானிடம் செய்த பிரார்த்தனையை நினைவு கூருவதாக சிவராத்திரி அமைந்திருக்கிறது" - என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் தாம் விடுத்த சிவராத்திரி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருந்தார்.

"மனிதர்களிடம் இருக்கும் மமதையையும், அகந்தையையும் அகற்ற உதவும் ஞானத்தைப் பரவச் செய்யும் வகையில் உலகெங்கிலும் உள்ள இந்து பக்தர்கள் பிரார்த்தனை செய்கின்றனர்." - என்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

ஆனால், அவரின் கீழ் இயங்கும் பொலிஸாரும், படையினரும், அவர்களுடன் சேர்ந்து இயங்கும் காவியுடை தரித்த பேரினவாதிகளும் அன்றைய சிவராத்திரி தினத்தில்தான், புத்தர் கூறிய ஞானத்தைத் தொலைத்து - காற்றில் பறக்க விட்டு விட்டு - பேரினவாத மமதையும், அகந்தையும் கொண்டு அடாவடி காட்டியிருக்கின்றார்கள். சிவராத்திரி அனுஷ்டிப்பதற்காக வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலயத்துக்கு வந்த தமிழ் - சைவ பக்தர்கள் மீது வெறியாட்டம் காட்டியிருக்கின்றார்கள்.

'மகா சிவராத்திரி தினத்தை அர்த்தமுள்ளதாக்கும் வகையில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்தி, மமதை, அகங்காரம் இல்லாத நாடாக அனைவரும் ஒன்றிணைந்து நாட்டின் எதிர்காலத்திற்கான திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்' - என்று கூறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் தனது கூற்றுக்கு மாறாக, தனது நாட்டில் கட்டவிழும் பௌத்த - சிங்களப் பேரினவாத மேலாண்மை வெறிப்போக்கைக் கட்டுப்படுத்த இயலவில்லை. அதுதான் உண்மை.

மகா சிவராத்திரி தினத்தில் இந்து மக்களினால் ஏற்றப்படும் ஒளியானது, முழு இலங்கை மக்களின் வாழ்விலும் ஒளியேற்றுவதாக அமையட்டும் எனப் பிரார்த்திக்கிறேன் என்று குறிப்பிடும் நாட்டின் ஜனாதிபதியினால் பௌத்த - சிங்களப் பேரினவாத தீவிரப் போக்கு வெறியாளர்கள் மூட்டும் இனவாதத் தீயின் சுவாலையைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

மகாசிவராத்திரிதினத்தில்இந்துமக்களினால் வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் ஏற்றப்பட இருந்த ஞான ஒளியை பேரினவாத வெறித் தீ சூறையாடிவிட்டது.

இது ஜனாதிபதிக்குத் தெரியுமோ, புரியுமோ தெரியவில்லை...!



# இலங்கைக்கான கியூபத் தூதர் அநுரவை நேற்றுச் சந்தித்தார்!

இலங்கைக்கான கியூபத் தூதுவருக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்கவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பு நேற்றுப் பிற்பகல் மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் நடைபெற்றுள்ளது.

இதன்போது, நீண்ட காலமாக கியூபாவின் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் இருந்த அரசியல் தொடர்புகள் பற்றியும் நிகழ்காலத்தில் தேசிய மக்கள் சக்தியின் அரசியல் செயற்பாடுகள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

நீண்ட காலத்துக்கு முன்பாக கியூபா மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடை பற்றியும் இன்றளவில் கியூபாவுக்கும் இலங்கைக்கும் இடையில் உள்ள நேரடி தொடர்புகள் மற்றும் அவற்றின் முன்னேற்றம், பிரச்சினைக்கு உரிய பகுதிகள் பற்றியும் கியூபத் தூதுவர், அநுர குமார திசாநாயக்கவிடம் தெளிவுபடுத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் கியூபத் தூதுவர் அலுவலகத்தின் பிரதான செயலாளரும் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் பிமல் ரத்நாயக்கவும் கலந்து கொண்டனர்.

# சட்டவிரோதமாகத் தொழிலில் ஈடுபட்டனராம் இருவர் வடமராட்சி கிழக்குக் கடலில் கைது!

யாழ். வடமராட்சி கிழக்கு கடற்பகுதியில் சட்டவிரோதமாகக் கடற்றொழிலில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கடற்றொழிலாளர்கள் இருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதக் கடல் நடவடிக்கைகளை தடுக்கும் முகமாக வெற்றிலைக்கேணி கடற்படை வடமராட்சி கடற்பகுதியில் விசேட உளவு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் ஆழியவளைக் கடற்பகுதியில் ஒளிபாய்ச்சி மூலம் கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் அதே பகுதியைச் சேர்ந்த இருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் இருவரும் கடற்படை முகாமுக்கு அழைத்து செல்லப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

விசாரணையின் பின்னர் கைது செய்யப்பட்ட கடற்றொழிலாளர்கள் அவர்களது உடமைகளுடன் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக தாளையடி நீரியல்வளத்திணைக்கள உத்தியோகத்தரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ்ப்பாணம் - மன்னார் பிரதான வீதியில் திடீரெனத் தீ பற்றிய மோட்டார் சைக்கிள்

## அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிய இருவர்







(மன்னார் நிருபர்)

மன்னார் திருக்கேதீஸ்வரத்தில் சிவராத்திரியை அனுஷ்டிப்பதற்கு யாழ் – மன்னார் பிரதான வீதி ஊடாக மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயம் நோக்கி நேற்று மாலை இருவர் மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த போது அந்த மோட்டார் சைக்கிள் திடீரெனத் தீப்பற்றியது.

இதன் போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் மோட்டார் சைக்கிளில் இருந்து பாய்ந்து அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.

நேற்று வெள்ளிக்கிழமை மாலை யாழ்.– மன்னார் பிரதான வீதி பள்ளமடு வீதியில் இடம் பெற்றுள்ளது.

தீயை அணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் மோட்டார் சைக்கிள் முழுமையாகத் தீக்கிரையானது.



# கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் நேற்றுத் தேர்

யாழ்ப்பாணம் கீரிமலை நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரர் ஆலய வருடாந்த தேர்த் திருவிழா நேற்றுக் காலை இடம்பெற்றது.

கருவறையில் வீற்றிருக்கும் விநாயகர், நகுலேஸ்வர் நகுலாம்பிகை, முருகன் வள்ளி, தெய்வானை ஆகிய தெய்வங்களுக்கு விஷேட அபிஷேகம் இடம்பெற்றன.

பின்னர் வசந்த மண்டபத்தில் அருள்பாலிக்கும் எம்பெருமானுக்கு அலங்கார தீபாராதனை இடம்பெற்று அலங்கரிக்கப்பட்ட மலர்தண்டிகையில் சுவாமி உள்வீதியூடாக வலம் வந்து, தேரேறி வெளி வீதி வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

தேர்த்திருவிழா நிகழ்வில் பல்வேறு பகுதிகளிலும் இருந்து பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் கலந்து கொண்டனர். தமது நேர்த்திக் கடன்களையும் பலர் நிறைவேற்றிக் கொண்டனர்.





# வன வளத் திணைக்களம் கையகப்படுத்திய பொதுமக்களின் காணிகளை விடுவியுங்கள்

## அமைச்சர் பவித்திராவிடம் ஆளுநர் சார்ள்ஸ் நேரில் கோரிக்கை



வனஜீவராசிகள் மற்றும் வன வளப் பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிக்குமாறு துறைசார் அமைச்சரிடம் வடக்கு ஆளுநர் கோரிக்கை.

வடக்கு மாகாணத்தில் வனஜீவராசிகள் மற்றும் வனவள பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்டுள்ள பொதுமக்களின் காணிகளை மீள விடுவிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் அமைச்சர் பவித்ரா தேவி வன்னிஆராச்சியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள அரச மரக்கூட்டு தாபனத்தில் அமைச்சரை நேரடியாக சந்தித்து ஆளுநர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

வடக்கு மாகாணத்தில் பொதுமக்களால் பயன்படுத்தப்பட்ட காணிகள் வனஜீவராசிகள் மற்றும் வனவள பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இதனால் அந்தக் காணிகளுக்குள் பொதுமக்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதுடன், விவசாயம், கால்நடை வளர்ப்பு உள்ளிட்ட செயற்பாடுகளையும் மேற்கொள்ள முடியாதுள்ளதாக ஆளுநர், துறைசார் அமைச்சரிடம் எடுத்துரைத்தார். இதனால் இந்த வர்த்தமானியை மீளப்பெற்று, மக்களுக்கான பயன்பாட்டுக் காணிகளை விடுவிக்குமாறும் ஆளுநர் கோரிக்கை விடுத்தார்.

வடக்கு மாகாணத்திலுள்ள ஐந்து மாவட்டங்களிலும் வனஜீவராசிகள் மற்றும் வனவள பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளின் விவரம் அடங்கிய அறிக்கையும் அமைச்சர் பவித்ராதேவி வன்னி ஆராச்சியிடம், ஆளுநர் இதன்போது சமர்ப்பித்தார்.

வடக்கு மாகாண ஆளுனரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை மற்றும் கலந்தாலோசிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுப்பார் என வனஜீவராசிகள் மற்றும் வனவள பாதுகாப்பு அமைச்சர் பவித்ராதேவி வன்னிஆராச்சி, ஆளுநரிடம் உறுதியளித்தார் எனக் கூறப்பட்டது.

## பொலிஸாரிடம் பிடிபடாமல் தப்புவதற்கு

# ஹெரோயின் பொதியை விழுங்கியவர் அது தொண்டையில் சிக்கி உயிரிழப்பு

பொலிஸாரிடம் பிடிபடாமல் தவிர்ப்பதற்காக ஹெரோயின் பொதியுடன் தப்பிச் சென்ற நபர் ஒருவர், அந்தப் பொதி தொண்டையில் சிக்கியதில் உயிரிழந்துள்ளார்.

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட சந்தேக நபர் மூச்சுத்திணறல் காரணமாக உயிரிழந்துள்ளார் எனப் பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரியவந்துள்ளது.

சிலாபம் பொது வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி வைத்தியர் இலங்கரத்ன பண்டாவினால் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது.

சிலாபம் ரத்னஉயன பிரதேசத்தில் வசித்து வந்த மிரிஸ்ஸ பத்திரகே பிரபாத் அபேவீரவே உயிரிழந்தவராவார்.

போதைப்பொருள் குற்றங்களுக்காக முன்னர் தண்டனை பெற்ற இந்த நபர், அவரைக் கைது செய்யப் பொலிஸார் துரத்திய போதே கீழே விழுந்து உயிரிழந்துள்ளார்.

சந்தேக நபரும் மற்றுமொரு நபரும் பம்பல பகுதியில் ஓட்டோ ஒன்றில் பயணித்துள்ளனர். சந்தேகத்தின் பேரில் ஓட்டோவைப் பொலிஸார் வழிமறித்துச் சோதனையிட்ட போது இருவரும் ஓட்டோவில் இருந்து இறங்கித் தப்பிச் சென்ற சமயம் ஒருவர் தரையில் விழுந்துள்ளார். பொலிஸார் அவரை மருத்துவமனைக்குக் கொண்டு சென்ற நிலையில், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

முதற்கட்ட நீதிவான் விசாரணைகளை மேற்கொண்ட சிலாபம் நீதிவான் சஷித டி சில்வா, பிரேத பரிசோதனையை மேற்கொள்ளுமாறு சட்ட வைத்திய அதிகாரிக்கு உத்தரவிட்டார்.

# வெடுக்குநாறிமலை சிவன் ஆலயத்தின் பூசகர் உட்பட இருவருக்குமே பிணை!

வெடுக்குநாறிமல. சிவன் ஆலயத்தின் பூசகர் உட்பட இருவர் கைதுசெய்யப்பட்டிருந்த நிலையில் அவர்களை வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றம் பிணையில் விடுவித்துள்ளது.

வெடுக்குநாறிமலை ஆலயத்தின் பூசகர் உட்பட இருவர் நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் நேற்று வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றில் அவர்கள் முற்படுத்தப்பட்டனர்.

ஆலய நிர்வாகத்தினர் சார்பாக முன்னிலையான சட்டத்தரணிகள், பூஜை வழிபாடுகள் நீதிமன்ற அனுமதியுடன் நடத்தப்பட்டவை என்று நேற்றைய விசாரணைகளின் போது குறிப்பிட்டிருந்தனர்.

இதனையடுத்துப் பூசகர் உள்ளிட்ட இருவரும் தலா ஒரு லட்சம் ரூபா சரீர பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

# கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த அரசு உறுதி

## கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் தெரிவிப்பு



கல்விச் சீர்திருத்தங்களில் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கும், குழந்தைகளின் கல்வி வாய்ப்புகளைப் பாதுகாப்பதற்கும் அரசு உறுதி பூண்டுள்ளது.

– இவ்வாறு கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்தே அவர் இந்த விடயத்தைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

2024- 2025 ஆம் ஆண்டுக்காக முன்மொழியப்பட்ட 'ஜனாதிபதி கல்வி புலமைப் பரிசில்' திட்டம் பொருளாதார சிரமங்களுக்கு உள்ளான பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை வெற்றிகரமாக முடிப்பதற்கு பெரும் ஆதரவை வழங்கும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கு அமைய இந்த வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. குறிப்பாக, கல்வியில் திறமை காட்டினாலும், கல்வியைத் தொடரும் வாய்ப்பை இழக்க, குடும்ப வருமானம் இன்மை ஒரு காரணமாக இருக்கக் கூடாது.

பாடசாலையில் தரம் 13 இல் நடைபெறும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை எதிர்வரும் காலங்களில் தரம் 12 இல் நடத்த எதிர்பார்த்துள்ளோம்.

தற்போது தரம் 11 இல் நடத்தப்படும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையை தரம் 10 இல் நடத்தவும் எதிர்பார்த்துள்ளோம். பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகும் மாணவர்களின் வயதை மேலும் ஒரு வருடத்தால் குறைப்பதே இதன் நோக்கமாகும்.

தொழில் வாய்ப்புகளுக்காக விண்ணப்பிப்பதில் பட்டதாரிகளாக இளம் வயதிலேயே பல்கலைக்கழகங்களை விட்டு வெளியேறுவதும் அவர்களுக்கு முக்கியமானது என்பதைக் கூற வேண்டும்.

முதலாம் தரத்துக்கு முன்னதாகவே சிறு குழந்தைகளுக்கு வகுப்புகளைத் தொடங்கவும் தயாராக உள்ளோம். இன்று பிறக்கும் குழந்தைகள் எதையும் மிக விரைவாகப் புரிந்து கொள்ளும் திறனைக் கொண்டுள்ளமையை அடிப்படையாக வைத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.- என்றார்.



# சாவகச்சேரியில் வசித்து வந்த 107 வயது முதியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மார்ச். 9

யாழ்ப்பாணம் - சாவகச்சேரி பகுதியில் வசித்து வந்த 107 வயதுடைய முதியவர் உயிரிழந்துள்ளார்.

சாவகச்சேரி உதயசூரியன் பகுதியில் வசித்து வந்தவரான பூச்சி வேலு முத்து என்பவரே நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

1917ஆம் ஆண்டில் பிறந்த இவர் தனது 107 வயதுப் பிறந்த நாளை அண்மையில் கொண்டாடினார்.

இவருக்குப் 10 பிள்ளைகள், 75 பேரப்பிள்ளைகள், 25 பூட்டப்பிள்ளைகள் மற்றும் 5 கொள்ளுப் பேரப்பிள்ளைகள் உள்ளனர்.

கடந்த ஒரு மாத காலமாகச் சுகயீன முற்று இருந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

# வெள்ளவத்தை காலி வீதியில் திடீரென்று தோன்றிய குழி!

கொழும்பு - வெள்ளவத்தை, பகுதியில் உள்ள காலி வீதியில் பாரிய குழியொன்று தோன்றியுள்ளது.

வீதியின் உட்புறத்தில் ஏற்பட்டுள்ள சரிவு காரணமாக இந்தக் குழி தோன்றியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதனால் அப்பகுதி பாதுகாப்பு நோக்கங்களுக்காக மூடப்பட்டுள்ளதுடன் அங்கு நேற்று வாகன நெரிசல் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக வெள்ளவத்தைப் பகுதியிலிருந்து செல்லும் வீதி ஒரு பாதைக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, காலிப் பக்கத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணிக்கும் சாரதிகள் லிலீ அவென்யூ கிளை வீதியூடாக கரையோர வீதியில் பிரவேசித்து கொழும்பு நோக்கிப் பயணிக்க வேண்டும் என பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

கொழும்பில் இருந்து காலிப் பக்கத்தை நோக்கிப் பயணிக்கும்வாகனங்கள்வழமைபோன்றுவெள்ளவத்தை ஊடாக பயணிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.






**உரலார் கேள்வி :- என்னாயிற்று உங்கள் சமாதான முயற்சி? அடுத்த தேர்தலில் நீங்களும் ஒரு 'சீற்றை' எதிர்பார்ப்பதாக சொல்லிக் கொள்கிறார்களே. அது உண்மையா?**

**உலக்கையார் பதில் :-** சுமந்திரன், சிறீதரன் ஆகிய இருவரும் 'உரலார் கேள்வி' பதிலைப் படித்து விட்டு என்னைச் சந்தித்துப் பேசினார்கள்.



அவ்விருவரும் சமாதானத் தீர்வொன்றினைக் காணும் விருப்பத்துடனேயே இருக்கிறார்கள் என்பது தெரிந்தது. பேசிப் பார்த்ததில் அவ்விருவருக்கும் பின்னால் சில அழுத்தங்கள் இருப்பதை உணர முடிந்தது. அதனால் நாம் நினைக்கிற அளவு இப்பிரச்சினையை வேகமாய்த் தீர்க்க முடியும் என்று தோன்றவில்லை.

முதலில் சுமந்திரனும் சிறீதரனும் மற்றவர்களால் தமக்கு இடப்பட்டிருக்கும் எல்லைக் கோடுகளை உடைத்துக் கொண்டு வெளிவரும் துணிவைப் பெற வேண்டும். அதற்கு முதலில் ஒருவரையொருவர் முழுமையாய் நம்பவேண்டும். மற்ற எவரையும் நம்பாமல் 'நாமே இப்பிரச்சினையைக் கடப்போம்' என முடிவு செய்து, செயலாற்ற இருவரும் துணிய வேண்டும்.

மற்றவர்கள் இவர்களுக்கு இட்டிருப்பது உதறி அறுத்தெறியக்கூடிய வெறும் நூல் வேலிகள் தான். அந்த நூல் வேலியை, கடக்க முடியாத மதில் சுவர் என நினைந்து, அதற்குள் இவர்கள் அடங்கிப் போவார்களேயானால், நிச்சயம் வரலாற்றுத் தோல்வியை அடைவார்கள். இவர்களின் பிடிவாதத்தால் நிகழப் போகும் பழி ஒருக்காலும் இவர்களை விட்டு அகலாது.

இருவருக்கும் பதவி சார்ந்த சில விருப்பங்கள் இருக்கத்தான் செய்கின்றன. அதையுணர்ந்து சில விட்டுக் கொடுப்புகள் மூலம் ஒருவரையொருவர் திருப்தி செய்ய முயல வேண்டும். இவ்விட்டுக் கொடுப்புக்களால் 'அவர் தோற்றார்', 'இவர் தோற்றார்' என்ற பேச்சே வராமல் பார்த்துக் கொள்ளவும் வேண்டும். இல்லாவிட்டால், தன்மானத்தூண்டுதல் எழுந்து மீண்டும் பகையாய் வெடிக்கும்.

வள்ளுவர் ஒரு நல்ல தலைவனின் இலக்கணங்களை வகுத்துக் காட்டுகையில், 'அஞ்சாமை' 'துணிவுடமை' எனும் இரண்டு பண்புகளின் அவசியத்தை வலியுறுத்துகிறார். முக்கியமான பிரச்சினைகளில் முடிவெடுக்கும் போது, ஒரு தலைவனுக்கு, இவ்விரண்டு பண்புகளும் அவசியம். சரியென்று தான் முடிவு செய்து விட்டால் எவருக்கும் அஞ்சாமல் அம்முடிவைச் செயல்படுத்தும் ஆண்மையுடையவனே சிறந்த தலைவனாவான். அந்த ஆண்மையே, துணிவுடமை என்று வள்ளுவரால் குறிக்கப்படுகிறது.

இவையெல்லாம் நடக்க, முதலில் இவ்விருவரும் ஒளிவு மறைவின்றி மனந்திறந்து ஒருவரோடு ஒருவர் பேச வேண்டும். பேசி தெளிவடைந்த பின்னர், ஒருவர் கையை மற்றவர் இறுகப்பற்றி உயர்த்திக் காட்டினால் போதும், அனைத்துப் பிரச்சினைகளும் அத்தோடு அடங்கிப்போகும்.

என்னால் முடிந்தவரை அவ்விருவருக்கும் இவ் உண்மைகளை உணர்த்தி இருக்கிறேன். சம்மதித்துச் சென்றார்கள். இதுவரை தொடர் நடவடிக்கைகளைக் காண முடியவில்லை. ஒரு வேளை அவர்கள், 'இவர் வெறும் இலக்கியவாதிதானே, இவருக்கென்ன அரசியல் தெரியப் போகிறது' என்று நினைத்தாலும் நினைத்திருக்கலாம். ஒரு காரியத்தை எப்படித் தொடங்கி , எப்படி வழி நடத்தி, எப்படி முடித்து வைக்கவேண்டும் என்பதை ஓர் இலக்கியவாதியை விட சிறப்பாக எவராலும் செய்து விட முடியாதென்பது உறுதி.

இவர்களும் தங்கள் நடவடிக்கைகளுக்குச் சார்பாக, பட்டம் பெற்றவர்களையும் பதவிகளில் உள்ளவர்களையும் தான் நம்பப் போகிறார்கள் என்றால், எனக்கு அதில் ஆட்சேபனை ஏது



மில்லை. 'ஏட்டுச்சுரக்காய் கறிக்கு உதவுமானால்' எனக்கும் சந்தோஷம்தான்! நான் சரியான பாதையொன்றைக் காட்டியிருக்கிறேன். அதில் நடக்க வேண்டியது இனி அவர்களின் பொறுப்பு. பொறுத்திருந்து பார்ப்போம்.

கடைசியாக, தேர்தலில் 'சீற்' எதிர்பார்ப்பதாக ஒரு வெடியைக் கொழுத்திப் போட்டிருக்கிறீர்கள்.

**(12ஆம் பக்கம் பார்க்க)**

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

இனத்தின் உயர்வு பற்றிய முயற்சிகளில் ஈடுபடும் போது, எனது உயர்வு நோக்கி பேரம் பேசும் கீழ்மைக் குணம் ஒருக்காலும் என்னிடம் இல்லை. அது தவிர இறைவன் இவ்வுலகில், மற்றவர்களால் கிட்டவும் நெருங்க முடியாத, போட்டிக்கே ஆள் இல்லாத, புகழ் கொண்ட ஓர் 'சீற்றை' எனக்கென்று தந்திருக்கிறான். அப்பிடியிருக்க நீங்கள் சொன்ன நிலையில்லாத 'சீற்றுகளுக்கு' ஆசைப்பட நான் ஒன்றும் முட்டாளில்லை.

**சல்லடையார் சலிப்பு - வேண்டாமை என்னும் விழுச் செல்வம் வாரிதியாரிட்ட நிறைய இருக்குது போல..**

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

**உரலார் கேள்வி :- நோய்க்கும் பிணிக்கும் உள்ள வித்தியாசம் என்ன?**

**உலக்கையார் பதில் :-** நோய் நம் உடலைத் தாக்கி பின் விட்டு விலகக் கூடியது. பிணி ஒரு தரம் வந்து விட்டால் என்றைக்கும் நம்மை விட்டு நீங்காது இருப்பது.. எப்போதும் நம்மைப் பிணித் திருப்பதால் தான் அதற்குப் பிணி என்று பெயர் வைத்தார்கள்.

**சல்லடையார் சலிப்பு - வாரிதியாரிட்ட ஒரு சந்தேகம் கேட்க வேணும். நம்ம தமிழ் தலைவர்கள் நம்மைப் பிடித்த நோய்களா? பிணிகளா?........ இது எப்பூபூடி?**

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

**உரலார் கேள்வி :- புலம் பெயர் தமிழர்கள் தான் நமது தமிழையும் சமயத்தையும் வளர்ப்பதாகச் சிலர் சொல்கிறார்களே? அது பற்றி உங்கள் கருத்து?**

**உலக்கையார் பதில் :-** 'கல்லானே ஆனாலும் கைப்பொருள் ஒன்று உண்டாகில் எல்லாரும் சென்றங்கே எதிர்கொள்வார்.' என்று ஔவையார் என்றோ சொல்லிவிட்டார். புலம்பெயர் தமிழர்கள் வீசுகிற பண வலையில் அகப்படாதவர்கள் என்று இன்று எவரும் இருப்பதாய்த் தெரியவில்லை. அதனால்தான் இல்லாத புகழை அவர்கள் மேல் ஏற்றி உரைத்து அவர்களையும் ஏமாற்றித் தம்மையும் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

புலம்பெயர்நாடுகளுக்குச் சென்ற நம் தமிழர்கள் அனைவரையும் நான் குற்றஞ்சாட்டவில்லை. நடப்பதையும் நடக்கப்போவதையும்தான் சொல்கிறேன். நம்மவர்களில் பெரும்பான்மையானோர் அந்த நாடுகளில் கால் வைத்ததுமே தம்மை அந் நாட்டுப் பிரஜைகளாகக் காட்டவே விரும்புகிறார்கள். தம் குழந்தைகளையும் அப்படியேதான் வளர்க்க விரும்புகிறார்கள். அங்கு அவர்கள் நடாத்தும் தமிழ் முயற்சிகள், ஆலயங்கள் போன்றவைகள் எல்லாம் இங்கிருந்து சென்ற நம்மினத்தாரின் எஞ்சிய வெறும் ஆசை வெளிப்பாடுகள்தான்.

மேற்சொன்ன விடயங்களில் அங்கு முன் னின்று உழைக்கும் பலரது குழந்தைகளுக்குப் பெரும்பாலும் தமிழ்ப் பேசவே வரவில்லை. அவர்களைப் பொறுத்தளவில் தமிழ், சமய முயற்சிகள் பழைமையின் அடையாளமாக பரணில் வைத்துக் காக்கப்படும் செப்புப் பானைகள்தான். அது அவர்களுக்கும் பயன்படப் போவதில்லை, மற்றவர்களுக்கும் பயன்படப் போவதில்லை.

என்னைப் பொறுத்தவரை இங்கிருந்து போன தமிழர்களின் தலைமுறை அழிவோடு அங்கு ஐம்பது வீத தமிழ் சமய முயற்சிகள் மெல்ல மெல்ல அழிந்து போகும். ஒரு வேளை பயத்தாலும் பழக்கத்தாலும், சமய முயற்சிகள் கொஞ்சக்காலம் நின்று பிடிக்கலாம். அவ்வளவுதான்! அதற்கு அடுத்த தலைமுறையோடு இன்னும் 25 வீத தமிழ் சமய முயற்சிகள் மாய்ந்து 'சேடம் இழுக்கத்' தொடங்கும். சாடியில் வைத்த குறோட்டன் செடியாய்ப் பயன் ஏதுமின்றி வெறும் அழகுக்காக மட்டும் அந்தத் தலைமுறையிடம் மேற் சொன்னவை ஒரு வேளை சிலகாலம் நிற்கலாம். அந்தத் தலைமுறையும் முடிய பெரும்பாலும் அங்கு தமிழிற்கு சமாதி கட்டப்படும் என்றே நினைக்கிறேன்.

அது, அது, அததற்குரிய மண்ணில்தான் தன் இயல்பு மாறாமல் தொடர்ந்து நிலைக்கும். தமிழும் சமயமும் அப்படித்தான். நம் தாய் மண்தான் அவற்றுக்கான உண்மைத்தளம். அம்மண்ணில் தான் நிரந்திரமாக அவற்றை நிலைகொள்ளச் செய்ய முடியும்.

**சல்லடையார் சலிப்பு - ஊரோடு ஒத்து வழிமொழியத் தெரியாத வாரிதியார் வாங்கிக் கட்டப் போகிறார்... டும்... டும்...டும்!**

✦✦✦✦✦✦✦✦✦✦✦✦✦

# வடமராட்சி கம்பர்மலை மக்களுக்கு நீர்த்தாங்கி அமைத்துக் கையளிப்பு!






வடக்கு கிழக்கு மறுவாழ்வு அமைப்பின் ஏற்பாட்டில் 'சுத்தமான குடி தண்ணீர் அனைவருக்கும்' என்ற செயற்றிட்டத்தின் மூலம் வடமராட்சி கம்பர்மலையில் நீர்த்தாங்கி அமைத்து மக்கள் பாவனைக்குத் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அனைத்து கம்பர்மலை மக்களும் இலகுவாகக் குடி தண்ணீரைப் பெற்றுக் கொள்வதற்காக பாரதி சனசமூக நிலையத்துக்கு முன்பாக உள்ள நல்ல தண்ணி கிணற்றடியில் நீர்த்தாங்கி அமைக்கப்பட்டது. இந்த நீர்த்தாங்கி நேற்று மக்கள் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கனடா தமிழ் தேசியக் கூட்டமைப்பின் காப்பாளர் வின் மகாலிங்கம், வடக்கு – கிழக்கு மறுவாழ்வு அமைப்பின் பணிப்பாளரும் வட மாகாணசபையின் முன்னாள் உறுப்பினருமான எஸ்.சுகிர்தன் ஆகியோர் கலந்து கொண்டு நீர்த்தாங்கியை மக்கள் பாவனைக்குத் திறந்து விட்டனர்.





# இந்திய வல்லதிக்கத்தின் அடிமைகளா தமிழ் அரசியல்வாதிகள்?



வி.எஸ்.சிவகரன்

உறவுகள் எப்போதும் நலனியல் அடிப்படையிலும், தேவையைத் தீர்த்துக் கொள்ளுதல் என்பதில் இருந்துதான் உருவாகும் என்பது நிதர்சனமான உண்மை. அதைத்தான் பொருள் முதல் வாத உறவு என்றார் மாக்ஸ்.

நாடுகளுக்கு இடையே இராஜதந்திர – இராஜீக அணுகுமுறை என்பது கூட நலனியல் சார்ந்தவையே. உலகளாவிய துருவ அரசியலுக்குள்ளும் இதுவே முதன்மைப்படுகிறது.

இராஜதந்திரம் எனும் சொல்லுக்கு சாமானிய அர்த்தத்தில் “போக்கிலித்தனம்“ என்றே வகைப்படுத்தலாம். படித்தவர்கள் என்று சொல்லப்படுபவர்கள் அதிகம் செய்வது, அதாவது முகத்துக்கு நேரே உண்மை பேசாமல் பின்னர் இரண்டக வேலை செய்வதையே. நாகரிகமான சொல்லாடலில் தந்திரோபாயம் என விளிக்கின்றோம். இது, சமூகத்திற்குக் கேடு விளைவிக்குமே தவிர ஏற்றமோ மாற்றமோ நிகழ்வதில்லை. புராணங்கள் தொடக்கம் நவீனத்துவம் வரை சாணக்கியர்களே சான்றோர்கள் ஆகும் விதி தோற்றம் பெற்று பெரு வளர்ச்சி பெற்றுவிட்டது.

தற்போதைய மென்வலுவினுடைய அசுர வளர்ச்சியும், இதை நோக்கியே வேகமாக நகர்கிறது. ஆக மொத்தத்தில் உலகில் இனி அறம், சத்தியம், நீதி, சமூக சம நீதி , சமத்துவம் – இவை இனி ஏடுகளில் மாத்திரமே இறுகப் பற்றி இருக்கும் செயலற்ற சொற்களாகி விடும். இவை மதபீடங்களிலே கூட இல்லாத போது அரசியலில் எதிர்பார்ப்பது தகுமா எனும் கேள்வி சாமானியமாக எழுவது இயல்பானதே. அதனால்தான் “அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்“ எனும் நீதி நெறி வார்த்தை இன்றைய நவீன அரசியலுக்கு பொருந்துகிறதா என்பது சந்தேகமாகின்றது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா – இந்திராகாந்தியின் பிராந்திய அரசியல் மோதலால், இந்திரா காந்தியால் தமது தேவைக்காக வடிவம் கொடுத்து வளர்க்கப் பட்டதுதான் ஆயுத குழுக்களின் உருவாக்கம். பின்னர் வளர்த்த கடா மார்பில் பாயுது எனும் நிலையும் அவர்களாலே உருவாக்கப் பட்டது.

அகிம்சையை போதிக்க வேண்டிய காந்திய தேசம் ஆயுதத்தைத் திணித்து, வன்முறையாளர்களாக சித்திரித்து, எம்மை ஏதிலிகள் ஆக்கியது மட்டுமல்ல, உலக அரங்கிலே எம்மைப் “பயங்கர வாதி” எனும் நிலையையும் தோற்றுவித்தது.

பயனற்ற பதின்மூன்றாவது திருத்தத்தால் தமிழர்களுக்க எந்தப் பயனும் இல்லை. அதைக் கூட நடைமுறைப்படுத்த இலங்கை அரசை நிர்ப்பந்திக்கத் தயாரில்லாத இந்தியா,தமிழர் நலனில் அக்கறை செலுத்துவது போல் அவ்வப்போது நீலிக்கண்ணீர் வடிப்பதுண்டு. இதில் காங்கிரஸும், பாரதிய ஜனதாக் கட்சியும் ஒன்றுதான். இருவரும் சளைத்தவர்கள் இல்லை.

தனது பிராந்திய நலனுக்கு ஆபத்து வந்துவிடும் என்பதால் தான் கள்ளக்காதல் கொள்வதுண்டு. அதுவும் வடக்கு – கிழக்கு வளச்சுறண்டலுக்காக இதய பூர்வமாக இல்லை. இந்திய மீனவர் விவகாரமும் கூட அடக்குமுறையின் வெளிப்பாடே. இவர்களால் தான் அதிகம் போதைப் பொருள்களும் நாட்டிற்குள் வருகின்றன.

தமிழ் அரசியல்வாதிகளில் அதிகமானவர்கள் இந்திய அடிமை விசுவாசிகள். அவர்களுக்குப் பல விதமான வர்த்தக – வாழ்வியல் – நலனியல் தொடர்புகள் மிக நீண்ட காலமாக உள்ளது. அதனால்தான் இவர்கள் யாவரும் எஜமானின் நல்ல அடிமைகளாக சேவகம் செய்கிறார்கள்.

தமக்கு வாக்களித்தவர்களின் நலனை விட, இந்திய விசுவாசமே மேலானது என்பதை எப்போதும் நிரூபிப்பவர்கள். இதற்கு சிறந்த உதாரணம் ஜனாதிபதி தெரிவின் போது இந்தியத் தூதரத்தின் வேண்டுகையினால் டலஸ்“க்கு வாக்களிக்கத் தீர்மானித்தவர்கள் என்ற விடயம் வெளியே வந்தமை. அது பெரும் சர்ச்சைக்குள்ளகியது யாவரும் அறிந்ததே. ஓர் எலும்பிற்காக ஒரு நேர்மையான மனிதன் ஒரு போதும் தன்னை நாயாக்கிக் கொள்ள மாட்டான் என்கிறது ஒரு வியட்னாம் பழமொழி.

தற்போது அரசியல்வாதிகள் கடந்து காவியுடையின் ஊடாகவும் அது ஊடுருவியுள்ளது. அது மிகவும் ஆபத்தானது. ஈழத்தமிழர்

(14ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய வல்லதிக்கத்தின் அடிமைகளா தமிழ் அரசியல்வாதிகள்?

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு "இந்துத்துவம்" எனும் கவசம் தமிழ்த் தேசியததையே சிதறடிக்கும். எமது விடுதலை உணர்வையும் தியாகத்தையும் மழுங்கடிக்கும். மதம் எப்போதும் தேசியத்திற்கு எதிரானது. நல்ல மதவாதி நல்ல தேசியவாதி ஆக முடியாது. நல்ல தேசியவாதி நல்ல மதவாதி ஆக முடியாது. மதம் என்பது அறிவற்ற உணர்வடிமை. அது வன்மத்தையும் அகங்காரத் தையுமே பிரதிபலித்து சமூகத்தை கூறு போடும் . அதனால் தான் பெரியாரிஸத்தால் தமிழகத்திற் குள் மதவாத சக்திகள் காலூன்ற முடியாமல் தடுமாறுகிறது. கர்நா டகா தவிர்த்துத் தென்னகம் முழுவதும் இந்த நிலை தொடர்கி றது.

இந்திய நலனில் உள்ள காசி ஆனந்தன் போன்றவர்கள் தாம் அடிமை சேவகம் புரிவது மாத் திரமன்றி, இந்து தமிழீழம் கேட் டால் இந்தியா ஆதரிக்கும் என்று ஏகபோக அடிமைத்தனத்தை வெளிப்படுத்துகிறார். இவர் மட்டு மல்ல, புத்திஜீவிகள் என்று தங்களைத் தாங்களே கூறித் திரியும் சிலரும், சில புலம் பெயர்ந்தவர்களும் இவ்விதமான கோமாளித்தனத்தில் ஈடுபடு கின்றனர். இதனால் எமக்கு கிடைத்த நலன் என்ன?

இலங்கை அரசு சீனாவுக்கு சார்பாக வெளிப்படையாகப் பல தடவைகள் இருந்த போதும் கூட கொழும்பு – டில்லி உறவில் பெரிய விரிசல் ஏற்படவில்லை. அரசுக்கும் அரசுக்கும்தான் உறவு என்பதில் அரசுகள் எப்போதும் தெளிவாக உள்ளன. அரசற்ற தரப்புக்களை கண்டு கொள்வதேயில்லை.

இதுவரை தமிழ்மக்களுக்கு உருப்படியாக இந்தியா உளப் பூர்வமாக என்ன செய்தது? முள்ளிவாய்க்கால் இன அழிப்புக் குக் கூட மிகவும் நெருக்கமான முறையில் உதவியது. 2009 மே மாதத்தில் மட்டும் பல தடவைகள் அன்றைய ஆட்சியாளர்களான பிரணாப் முகர்ஜி, எம்.கே.நாரா யணன், சிவசங்கர்மேனன் போன் றோர் அடிக்கடி கொழும்புக்கு வந்து இன அழிப்பு யுத்தத்தை தாமே நாடாத்துவது போல் இறுமாப்பு மகிழ்ச்சியடைந்தனர் என்பதை எவரும் மறந்து விட மாட்டார்கள்.

தமிழ் அரசியல்வாதிகள் இந் திய அடிமைகளாக இருக்கலாம். ஆனால் தமிழ்மக்கள் மத்தியில் இந்திய எதிர்ப்புணர்வு ராஜ பக்ஷக்களுக்கு நிகராகவே உண்டு. ஏனெனில் இந்திய அமைதிப்படையின் அநியாயங் கள் இலகுவில் நினைவிழந்து விடுமா?

ராஜீவ் காந்தியை ஈழத்தமி ழர்கள் கொலை செய்தார்கள் எனும் வெறும் வாதத்தை வைத் துக் கொண்டு ஒரு இனத்தையே இந்தியா கொலை செய்தது என்று தமிழ் மக்களில் பலர் நம்புகி றார்கள் ஆனால் இந்திரா காந் தியைக் கொலை செய்த சீக்கிய இனத்தில் உள்ள மன்மோகன் சிங்கைப் பத்து ஆண்டுகள் பிரத மராக வைத்து அழகு பார்த் தார்கள். இதுதான் பாரதத்தின் பரிநிர்வாண நீதியோ...?

தற்போது யாழில் உள்ள துணைத்தூதரகம் தமிழ்மக்கள் மத்தியில் இந்திய சார்புநிலை மனோபாவத்தை வலுக்கட்டாய மாக விதைக்க முனைகிறது. சில நிரந்தர அடிமைகளை அவ்வப் போது அழைத்துச் சோறு கொடுக் கிறது. தானே கலாசார மண்ட பத்தை யாழில் கட்டி அது திறந்து பல மாதங்கள் கடந்தும் இன்னும் கையளிக்காமல் அதில் தாங்களே கூத்தாட்டமும் அவ்வப்போது நடாத் துகின்றார்கள். இதுதான் அவர்க ளின் தமிழர் நலன் . அது மாத் திரமல்ல, விமான போக்குவரவு, மின் கட்டமைப்பு வசதிகள் என வடகிழக்கை தமது பிடிக்குள் அகப் படுத்தி வைத்திருக்கவே முயல்கி றது.

அவ்வப்போது அடிமைகளை அழைத்து சீனாவுக்கு எதிராகப் பேசவும் வைக்கிறார்கள். தற்போது இவர்களின் அடிமையாக வலம் வரும் ஒருவர் சில ஆண்டுக ளுக்கு முன்பே இந்தியாவை வழிப்படுத்த சீன – தமிழ் நட்புற வுச்சங்கம் தொடங்குவோம் என்று கூறியவர். எனவே அண்மை யில் நடந்த சாந்தனின் இறப்பு விடயத்தில் கூடவே வந்த இந் திய சட்டத்தரணி புகழேந்தி பகி ரங்கமாகமாகவே கூறினார் – அது மத்திய – மாநில அரசுகளின் கொலை என்று. அது உண்மையும் கூட. இவர்கள் நடந்து கொண்ட விதங்களில் அது தானாவே வெளிப்பட்டது.

சாந்தனுக்கு அஞ்சலி செலுத் துவதில் கூட பல்வேறு விதமான நிர்ப்பந்தங்களை ஏற்படுத்திய தாக அறிகிறோம். இந்திய அடி மைத் தமிழ்க்கட்சிகளின் பல தலைவர்கள் தலைமறைவு அரசி யல்வாதிகள் மட்டுமல்லர், இந் திய விசுவாசிகளும் கூட. அவர்கள் போகவில்லை. கிழக்கு மாகா ணத்தவர்கள் எவரையும் காணக் கிடைக்கவில்லை.

வழமையாக தமிழ்த்தேசிய நிகழ்வுகளை வலிந்து தமது தலை யில் சுமக்கும் தமிழ்தேசிய மக்கள் முன்னணி கூட பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. அவர்கள் நாடா ளுமன்ற உறுப்பினர்களாக வர முதல் இருந்த இந்திய எதிர்ப்பு நிலையின் அதி தீவிரத்தன்மை தற்போது நலிவடைந்து விட்டது. தமிழரசுக்கட்சியில் சிறிதரன் – சார்ள்ஸைத் தவிர வேறு எவரும் போனவர்களாகத் தெரியவில்லை. ஆயுதக்குழுக்கள் எவரையும் காணவில்லை.

பல்கலை மாணவருக்கும் பல இடர்ப்பாடுகள் இருந்ததாகக் கேள்வி. குறைந்த பட்சம் தமது அலுவலகங்களில் கூட அஞ்சலி செலுத்தவில்லை. புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள அமைப்புக்கள் கூட ஓர் அறிக்கையோ அஞ்ச லியோ செலுத்தியதாகத் தெரிய வில்லை. மரணத்தில் கூட அரசி யல் நோக்குநிலை தேடுபவர்கள் தான் தமிழ்த்தேசியவாதிகளாம். சுய உணர்வற்ற அடிமைகள். ஆனாலும் மக்கள் இவர்களுக்கு மாறாக பெரும் உணர்ச்சிப் பிரவா கத்தையே வெளிப்படுத்தினார்கள். இதில் இருந்தாவதும் அடிமை அரசியல்வாதிகளும் இந்தியாவும் புரிந்து கொள்ள வேண்டும் – மக் களின் உண்மையான உணர்வு களை.

ஆகவே இத்தியா இலங்கை அரசின் பக்கமே தவிர, பாதிக்கப் பட்ட தமிழ்மக்களின் பக்கம் ஒரு போதும் இருந்ததில்லை. ஏனெ னில் தமிழர்களுக்கு இந்த நிலையை ஏற்படுத்தியதில் இந் தியாவுக்கும் பெரும் பங்குண்டு. இனப்பிரச்சினைக்குத் தீர்வு பதின் மூன்றாவது திருத்தம் என்றார்கள். தற்போது பொருளாதார நெருக்கடி தீர்ந்தால் சரியாகும் என்கின் றார்கள். ஆகவே இந்தியாவை விட ஆபத்தானவர்கள் இந்திய அடிமைகளே. அவர்களை முத லில் தமிழ்மக்கள் அரசியல் அரங்கில் இருந்து அகற்ற வேண் டும். இதயசுத்தியோடு எதுமே செய்யாத இந்தியாவை ஏன் தான் இவர்கள் தாங்கிப் பிடிக்கிறார் களோ தெரியவில்லை. யாவும் டெல்லிக்கே வெளிச்சம்....!

# காரைதீவு ஆதி சிவன் ஆலயத்தில் இடம்பெற்ற சிவராத்திரி நிகழ்வுகள்








(வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு ஆதிசிவன் ஆலயத்தில் மகாசிவராத்திரி விரதத்தை முன்னிட்டு நேற்று (08) வெள்ளிக்கிழமை காலை பூஜை வழிபாடுகளுடன் நிகழ்வு ஆரம்பமானது.

பிரதேச செயலகமும் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களமும் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

மாணவரிடையே குருத்தோலை பின்னுதல், நிறை குடம் வைத்தல், கோலம் போடுதல் போன்ற பாரம்பரிய பண்பாட்டுப் போட்டிகளும் இடம்பெற்றன.

அறநெறி பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

# நாட்டில் தென்னைப் பயிரில் வெண்ணிறப் பூச்சித் தாக்கம்!

## உரிய நடவடிக்கைகள் எடுக்காவிட்டால் வாழ்வாதாரம் பாதிப்படையும்





நாட்டில் பரவலாக உள்ள தென்னை மரங்களில் வெண்ணிறப் பூச்சிகளின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுகிறது.

இது மிக வேகமாகப் பரவி வரும் நிலையில் தென்னை மரங்கள் காலப் போக்கில் அழிவடைந்து போகும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

தென்னைகளில் இவற்றின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் தற்போது தென்னைகளின் கீழ் நிற்கும் ஏனைய தாவரங்களிலும் அவற்றின் தாக்கம் அதிகரித்துச் செல்கிறது.

வாழை, பூச்செடிகள், ஏனைய பயிர்களிலும் இந்த வெண்ணிற ஈக்களின் தாக்கம் அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்கத்தால் தென்னை ஓலைகள் வறண்டு போய் வளர்ச்சி அற்றுக்கா ணப்படுகின்றன. காலப் போக்கில் ஓலைகள் கருகிப் போகும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

தேங்காய்கள் காய்க்கும் வீதமும் இதனால் குறைவடைந்து போயுள்ளது என்றும், தென்னம் வட்டுகள் செழிப்பு இன்றிச் சூம்பிப் போகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது. தென்னை மரங்களில் உள்ள தேங்காய் முதலானவற்றின் வளர்ச்சியும் குறைவடைந்து காணப்படுகிறது என்றும் பல்வேறு தரப்புகளிலும் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்த நிலைமையால் தேங்காய் உற்பத்தியில் பாரிய வீழ்ச்சி நிலைமை ஏற்படவுள்ளது.

தென்னை மரங்களில் காணப்படும் இந்தப் பூச்சிகள் பறந்து ஏனைய பயிரினங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

மக்களுடைய வாழ்வாதாரமாக அமையும் இந்தத் தென்னைப் பயிரில் ஏற்பட்டுள்ள நோய்த் தாக்கத்தால் மக்கள் பெரும் பாதிப்பை எதிர்கொள்ளவுள்ளனர்.

இதனை முற்றாக ஒழிக்கச் சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# “வடக்கின் பெரும் போர்” பரியோவான் முன்னிலை!

(பிரபாகரன் டிலக்சன்)

117ஆவது “வடக்கின் பெரும் போர்” போட்டியில் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி வீரர்கள் சகலதுறைகளிலும் ஆதிக்கம் செலுத்திவருவதால் மத்திய கல்லூரியின் வாய்ப்பு கேள்விக்குறியாகியுள்ளது.

பெரும்பாலும் பரியோவான் கல்லூரி பக்கம் இன்று இறுதி நாள் ஆட்டத்தின் போது வெற்றிக்கிண்ணம் செல்லும் வாய்ப்பே தென்படுகின்றது.

வடக்கின் பெரும் போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையிலான துடுப்பாட்ட போட்டி நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

117ஆவது முறையாக இடம்பெறும் இப்போட்டிகள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் வியாழனன்று ஆரம்பமாகின. போட்டிகள் 7,8,9 ஆம் திகதிகள் என மூன்று நாள்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன.



நேசகுமார் எபனேசர் ஜெஷில் தலைமையிலான யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியும் நிசாந்தன் அஜய் தலைமையிலான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் களமிறங்குகின்றன.

போட்டிகளின் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை 9 மணியளவில் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 56.4 ஓவர்களை எதிர்கொண்டு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. துடுப்பாட்டத்தில் அணி சார்பில் சயந்தன் 55 ஓட்டங்களையும், நியூட்டன் 24 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் பரியோவான் கல்லூரி சார்பில் கவிசன் 5 விக்கெட்டுகளையும், மாதுளன் 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினார்கள்.

பதிலுக்கு தனது முதலாம் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பரியோவான் கல்லூரி 70.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 228 ஓட்டங்களைப் பெற்றது. இதன் மூலம் முதல் இனிங்ஸில் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி 71 ஓட்டங்கள் முன்னிலை வகித்தது. பரியோவான் கல்லூரி சார்பில் அணித்தலைவர் ஜெஷில் 52 ஓட்டங்களையும், அபியோசுவாந்த், சச்சின் கணபதி ஆகியோர் 40 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி சார்பில் அபிலாஷ், முரளிதிசோன் ஆகியோர் தலா நான்கு விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்கள்.

பதிலுக்கு தனது இரண்டாம் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 9 விக்கெட்டுகளை இழந்து 140 ஓட்டங்களை பெற்றபோது இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவிற்கு வந்தது. இதன்படி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஒரு விக்கெட் மீதமாகவுள்ள நிலையில் 69 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது.



அணி சார்பில் அஜய் 23 ஓட்டங்களையும், சிமில்டோன் 21 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக்கொண்டனர். பந்துவீச்சில் பரியோவான் கல்லூரி சார்பில் கஜகர்ணன், அசந்த் ஆகியோர் தலா இரு விக்ககட்டுகளை கைப்பற்றினார்கள்.

117ஆவது வடக்கின் பெரும் போர் போட்டியில் கடந்த இருநாள்களும் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி வீரர்கள் சகலதுறைகளிலும் ஆதிக்கம் செலுத்திவருவதால் மத்திய கல்லூரியின் வெற்றிவாய்ப்பு கேள்விக்குறியாகியுள்ளது.

இன்றைய தினம் தொடர்ச்சியாக போட்டிகளின் மூன்றாம் நாள் ஆட்டம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# திமுக கூட்டணியில் விடுதலைச் சிறுத்தை கட்சிக்கு இரண்டு தொகுதிகள் ஒதுக்கீடு!




மக்களவைத் தேர்தலில் திமுக கூட்டணியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கு 2 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளன. கூடுதல் தொகுதிகள் கோரி முதல்வர் மு.க.ஸ்டா லினை சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று விசிக தலைவர் திருமாவளவன் சந்தித்துப் பேசிய நிலையில், 2 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

தமிழகத்தில் மக்களவைத் தேர்தல் பணிகளை தீவிரப் படுத்தியுள்ளது திமுக. அதன்படி தொகுதி பங்கீடு பேச்சு இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளன. நேற்றுத் திமுக – மதிமுக இடையே தொகுதி பங்கீடு கையெழுத்தானது. அதன்படி, திமுக கூட்டணியில் ஒரு மக்களவை தொகுதி மதிமுகவுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மதிமுகவை தொடர்ந்து விசிக தலைவர் திருமாவளவன், அண்ணா அறிவாலயம் வந்து தொகுதி பங்கீடு உடன் படிக்கை செய்தார். தொகுதிப் பங்கீட்டில் முதல்வர் ஸ்டாலின் மற்றும் திருமாவளவன் கையெழுத்திட்டனர். அதன்படி, திமுக கூட்டணியில் விசிகவுக்கு 2 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. 3 தொகுதிகள் கேட்ட நிலையில் விசிகவுக்கு இரண்டு தொகுதிகள் ஒதுக்கப்பட்டன. கடந்த 2019 தேர்த லில் சிதம்பரம், விழுப்புரம் தொகுதியில் விசிக போட்டியிட்ட நிலையில் மீண்டும் இதே தொகுதிகள் இந்த தேர்தலில் ஒதுக்கப்பட்டுள்ளது.

கூட்டணி தொடர்பாக செய்தியாளர்களைச் சந்தித்த திருமா வளவன்,

தனிச் சின்னத்தில் போட்டியிடுகிறோம். பானை சின்னம் கோரி தேர்தல் ஆணையத்தில் முறையிட்டுள்ளோம். தனிச் சின்னத்தில் போட்டியிடத் திமுக உடன்பாடு தெரிவித்துள்ளது. எல்லா சூழ்நிலைகளையும் கருத்தில் கொண்டு தான் 2 தொகுதிகளில் போட்டி என்பதில் உடன்பட்டுள்ளோம். வேட்பாளர் கள் விவரம் பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவித்தார்.

# 39 தொகுதிகளுக்கான வேட்பாளர் பட்டியலை வெளியிட்டுள்ள காங்கிரஸ்

## காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி மீண்டும் வயநாடு தொகுதியில்

2024 மக்களவைத் தேர்தலில் போட்டியிடும் முதல்கட்ட வேட்பாளர் பட்டியலை காங்கிரஸ் கட்சி வெளியிட்டுள்ளது. அதன்படி, 39 தொகுதிகளுக்கான வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

மக்களவைத் தேர்தலை முன்னிட்டுக் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் ஆலோசனைக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சியின் முதல்கட்ட வேட்பாளர் பட்டியல் டெல்லியில் கடந்த வெள்ளிக் கிழமை வெளியிடப்பட்டது. காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி மீண்டும் வயநாடு தொகுதியில் போட்டியிடுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சத்தீஸ்கரின் 6 தொகுதிகள், கர்நாடகாவின் 7 தொகுதி கள், கேரளாவின் 16 தொகுதிகள், தெலங்கானாவின் 4 தொகுதிகள், மேகாலயாவின் 2 தொகுதிகள், லட்சத்தீவு, நாகலாந்து, சிக்கிம் மற்றும் திரிபுராவின் தலா தொகுதியில் போட்டியிடும் 39 வேட்பாளர்கள் அடங்கிய இந்தப் பட்டிய லைக் காங்கிரஸ் கட்சி வெளியிட்டுள்ளது.





# அமெரிக்கா, தென்கொரியாவை அழிக்கும் திறனை வடகொரியா உருவாக்க வேண்டும்

## வடகொரிய இராணுவத்துக்கு ஜனாதிபதி உத்தரவு

அமெரிக்கா, தென்கொரியாவை அழிக்கும் போர்த்திறனை உருவாக்க வேண்டும் என்று வடகொரிய இராணுவத்துக்கு அந்த நாட்டு ஜனாதிபதி கிம் ஜாங் அன் உத்தரவிட்டுள்ளார் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வடகொரியா ஜனாதிபதி அந்த நாட்டு அணு ஆயுத இராணுவ தளத்துக்கு சென்று ஆய்வுகளை மேற்கொண்ட போதே இதனை கூறியுள்ளார்.

கொரிய கடல் பகுதியில் ஏவுகணை மற்றும் அணு ஆயுத சோதனைகள் மூலம் வடகொரியா அவ்வப்போது பதற்றத்தை ஏற்படுத்துகின்றது.

இதனால் தங்களது பாதுகாப்பு கருதி தென்கொரியாவும், ஜப்பானும் அமெரிக்காவுடன் இணைந்து கூட்டுப்போர் பயிற்சியில் ஈடுபடுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் தங்களுக்கு எதிரான போர் ஒத்திகையாக வடகொரியா இதனை கருதுகிறது.

இதன்படி தங்களை எதிர்க்கும் நாடுகள் முற்றிலும் அழிக்கப்படும் என வடகொரியா தலைவர் கிம் ஜாங் அன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதற்கமைய தென்கொரியா மீண்டும் அமெரிக்காவுடன் இணைந்து கூட்டுப்போர் பயிற்சியை ஆரம்பித்துள்ளமை கொரிய பதற்றத்தை மேலும் வலுப்படுத்தியுள்ளது என்று கூறப்படுகிறது.

# டிரம்பால் ஜனநாயகத்துக்கு ஆபத்து; கடுமையாகச் சாடுகிறார் ஜோ பைடன்!

டிரம்பால் ஜனநாயகத்துக்கு ஆபத்து உள்ளது. ஜனநாயகம் காக்கப்பட வேண்டும்.

இவ்வாறு டிரம்பை கடுமையாக சாடி நாடாளுமன்றில் தனது உரையை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நிகழ்த்தியுள்ளார்.

அமெரிக்க அதிபர் தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில் பைடனின் இந்த உரை தற்போது பேசுபொருளாக மாறியுள்ளது.

நாட்டின் பொருளாதார நிலை, அரசின் திட்டங்கள், வளர்ச்சி பணிகள் மற்றும் சாதனைகள் ஆகியவற்றை மையப்படுத்தி நாடாளுமன்றில் அதிபரால் நிகழ்த்தப்படும் ஒருங்கிணைந்த கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு பேசியிருந்தார்.

ஒரு மணிநேரம் தொடர்ச்சியாக நடத்தப்பட்ட இந்த உரையில் பைடன், ரஷ்ய ஜனாதிபதி புடினையும் விட்டுவைக்காமல் கடுமையாக சாடியிருந்தார்.

ரஷ்ய அதிபரிடம் ஒரு முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி இவ்வாறு கூறலாமா? இது ஆபத்தானது. புடின் உக்ரைனுடன் நிறுத்தி கொள்ள மாட்டார். நாம் உக்ரைனுக்கு தேவைப்படும் ஆயுத உதவி வழங்கினால் புடினை நிறுத்த முடியும். நான் புடினுக்கு அஞ்ச மாட்டேன் எனவும் அவர் தெரிவித்தார்.



தற்போது அமெரிக்காவில், அமெரிக்காவை கடந்த காலத்துக்குக் கொண்டு செல்ல நினைப்பவர்களுக்கும், எதிர்காலத்தில் நிலைநிறுத்த நினைப்பவர்களுக்கும் இடையேயான போட்டி நடைபெறுகிறது என்றும் அவர் மேலும் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் - 09.03.2024




இன்று சிறப்பான வாய்ப்பு காணப்படும். உங்கள் தனித்திறமையை பயன்படுத்தி உங்கள் இலக்குகளை முடிப்பீர்கள். மனதில் இருக்கும் தெளிவு காரனாக சரியான முடிவை எடுப்பீர்கள்.

அதிக பணிகள் காரணமாக பணியில் மும்மரமாக இருப்பீர்கள். உங்கள் தனித்த திறமை மூலம் உங்கள் பணிகளில் வெற்றி காண்பீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள். நீங்கள் வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் நல்ல பிணைப்பை உருவாக்குவீர்கள்.

உங்கள் திறமை மற்றும் நேர்மையான முயற்சி மூலம் உங்களுக்கு கூடுதல் ஊக்கத்தொகை கிடைக்கும். இன்றைய நாளுக்குத் தேவையான போதிய பணம் சம்பாதிக்க வாய்ப்பு உள்ளது.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். சிறந்த ஆற்றல் காரணமாக நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று சீரான பலன்கள் கிடைக்கும். விருந்தினர்களின் வருகை உங்களுக்கு உற்சாகமளிக்கும். அதிர்ஷ்டம் காரணமாக நிறைய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் கடின உழைப்பின் காரணமாக பணியிடத்தில் உங்களுக்கு வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள்.இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. உங்கள் நிதி நிலைமை சிறப்பாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும். இன்று உங்கள் பதட்டத்தை கட்டுப்படுத்த வேண்டும். ஆன்மீக செயல்களில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்.

மிதுனம் வேலை / தொழில்:

1 2 3 4 5இன்று முக்கிய பணிகளை உங்களால் முடிக்க இயலாது. உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது சில அசாதாரணமான தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு கவலயை அளிக்கும். நீங்கள் சிறப்பாக திட்டமிட்டு பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் துணையுடன் திருப்தியான மனநிலை காணப்படாது. உங்களின் மகிழ்ச்சியான வார்த்தைகள் மூலம் அவரை மகிழ வைப்பது கடினமாக உணர்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. அதிகமாக சம்பாதித்தாலும் இன்று தேவையற்ற விஷயங்களுக்காக செலவு செய்ய நேரலாம்.

ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது. தூக்கமின்மை காரணமாக உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படும்.




இன்று சவாலான சூழ்நிலை காணப்படும். இதனால் சமநிலை இழப்பீர்கள். நீங்கள் பொறுமையுடனும் உறுதியுடனும் இதனை சமாளிக்க வேண்டும். பாதகமான விளைவுகள் ஏற்படாமல் இருக்க கவனமாக உரையாடவும்.

நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். திட்டமிட்டு ஒழுங்காக பணியாற்ற வேண்டும். உங்களின் முயற்சி சிறப்பாக இருந்தாலும் உங்கள் முதலாளிகளின் அங்கீகாரம் பெற இயலாது.

உங்கள் துணையுடன் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் மகிழ்ச்சியான போக்கை மேற்கொள்ளவேண்டும். அமைதியான போக்கு சூழ்நிலையின் தாக்கத்தை தணிக்கும்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்காது. உங்கள் சம்பாத்தியமும் குறைவாக இருப்பதன் காரணத்தால் பணத் தட்டுப்பாட்டை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. கால் வலி மற்றும் செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினை காணப்படும்.




இன்று உங்கள் ஆர்வம் மேம்படும் வகையிலான சூழ்நிலை காணப்படும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள். பயணங்கள் ஏற்படலாம்.

சிம்மம் வேலை / தொழில்:

1 2 3 4 5பணியிடத்தில் ஆச்சரியமும் உற்சாகமும் காணப்படும். உங்கள் கடின உழைப்புக்கான ஊக்கத்தொகை கிடைக்கப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சகஜமாக நடந்து கொள்ள வேண்டும். அனுசரித்து போவதன் மூலம் நீங்கள் மகிழ்ச்சியை பராமரிக்க இயலும்.

பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். உங்களுக்கு உயர்வு நிலை கிடைக்கும். இதனால் நீங்கள் அதிகம் சம்பாதிப்பீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் இருக்கும் ஆற்றல் காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். நிகழ்வுகள் சீராக நடக்கும். முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள். அவற்றின் மூலம் நன்மை விளையும்.

பணியிடத்தில் சிறந்த வளர்ச்சி காணப்படும். இன்று முழுவதும் மும்மரமாக இருப்பீர்கள். முறையாக திட்டமிடுவதன் மூலம் இன்று சிறப்பாக பணியாற்றலாம்.

உங்கள் துணையுடன் நகைச்சுவையான தருணங்களை பகிர்ந்து கொள்ள வேண்டும். இதன் மூலம் உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்ள இயலும்.

கணிசமான பண வரவு காணப்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் வகையில் நீங்கள் பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்வீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்று விருப்பமான பலன்கள் கிடைக்காது. வேதனையான சூழ்நிலையில் நீங்கள் பொறுமை இழந்து உணர்ச்சி வசப்படலாம். எதையும் லேசாக எடுத்துக்கொள்வதன் மூலம் நன்மை காணலாம். பிரார்த்தனை மற்றும் இறை வழிபாடு ஆறுதல் தரும்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. சில தவறுகள் காரணமாக வேலையில் முன்னேற்றம் காண்பது கடினம்.

உங்கள் துணையுடனான உறவில் மகிழ்ச்சியை தக்கவைக்க அவருடன் பேசும் போது நீங்கள் மென்மையான இனிமையான வார்த்தைகளை பேச வேண்டியது அவசியம்.

இன்று உங்கள் அஜாக்கிரதை காரணமாக பண இழப்பு ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது.

நடக்கும்போது கீழே விழ வாய்ப்புள்ளது. எனவே எச்சரிக்கையாக இருக்கவும்.




இன்று சில கடினமான சவாலான சூழ்நிலையை கையாள வேண்டியிருக்கும். இறைவழிபாட்டின் மூலம் ஆறுதல் பெறலாம். இசை கேட்பதன் மூலம் ஆறுதல் பெறலாம்.

பணியிடத்தில் குழப்பமான சூழ்நிலை காணப்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

நீங்கள் உங்கள் துணையிடம் தீவிரமாக நடந்து கொள்வீர்கள். இந்தப் போக்கை தவிர்த்து நீங்கள் நட்போடு நடந்து கொள்ள வேண்டும்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது.இதனால் கடன் வாங்க வேண்டிய சூழல் ஏற்படும்.

இன்று காய்ச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. என்றாலும், தக்க சமயத்தில் சிகிச்சை பெறுவதன் மூலம் குணம் பெறலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 09.03.2024




இன்று மகிழ்ச்சியான தருணங்கள் காணப்படும். உங்கள் இலக்குகள் நிறைவேறும். முக்கிய முடிவுகள் நல்ல பலன்களை அளிக்கும். உங்கள் செயல்களின் மூலம் வெற்றி கிடைக்கு.

உங்கள் பணியில் நீங்கள் மிகுந்த திருப்தி காண்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்க வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் நல்லுறவு கொண்டிருபீர்கள். உங்கள் துணையிடம் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே அன்பு வளரும்.

பண வரவு உங்களை மகிழ்ச்சியாக வைத்திருக்கும். அதிர்ஷ்டம் காரணமாக இன்று கணிசமான தொகை சம்பாதிப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். திடமான மனதின் காரணமாக இன்று சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று விரும்பும் பலன்கள் கிடைக்காமல் போகலாம். நீங்கள் உங்கள் சௌகரியங்களை விட்டுக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை காணப்படும். இந்தச் சவால்களை மேற்கொள்ள நீங்கள் திட்டமிட வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பது சிறந்ததல்ல.

பணிகள் அதிகமாக காணப்படும். கூடுதல் பணிகள் காரணமாக உங்கள் பணிகளை முடிப்பது கடினமாக இருக்கும்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் மோதல் காணப்படும். இதனால் தவறான புரிந்துணர்வு ஏற்படும். இத்தகைய சூழ்நிலையை நீங்கள் தவிர்க்க வேண்டும்.

இன்று தேவையற்ற செலவுகள் ஏற்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள பணத்தை பயன்படுத்த இயலாது.

கண் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. தகுந்த சிகிச்சை மேற்கொள்வதன் மூலம் விரைவில் குணமடையலாம்.




இன்று விரும்பும் பலன்களை அடைய கடினமாக உழைக்க வேண்டும். இன்று அனுகூலமான நாளாக இருக்காது. நீங்கள் நம்பிக்கை இழந்து காணப்படுவீர்கள். உங்கள் இலக்குகளை அடைய நீங்கள் நம்பிக்கை உணர்வுடன் இருக்க வேண்டும்.

பணியிடத்து சவாலான சூழ்நிலையை நீங்கள் பொறுமையோடு சமாளிக்க வேண்டும். பணிகள் அதிகமாக காணப்படும். இதனால் பணிகளை முடிப்பதில் தாமதம் ஏற்படும்.

பாதுகாப்பின்மை உணர்வு உங்களை பாதிக்கும். இதனால் உங்கள் துணையுடனான உறவில் மகிழ்ச்சி காணப்படாது.

உங்கள் வீட்டு பெரியவர்களின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். இதனால் பணம் சேமிப்பது குறையும்.

தேவையற்ற உணர்வுகள் உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும். இதனால் தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று விரும்பும் பலன்கள் கிடைக்காது. நீங்கள் சமநிலை இழக்கும் வகையில் சில சவால்கள் காணப்படும். நன்மையானபலன்கள்காணஅனுசரித்து நடக்க வேண்டும். தைரியமாக இருந்தால் சிறப்பாக உணரலாம்.

கவனக் குறைவு காரணமாக பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. திறமையாக பணியாற்ற கவனித்து ஒழுங்கு முறையுடன் பணியாற்ற முயல வேண்டும்.

நீங்கள் உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்தும் வாய்ப்புளதால் உங்கள் உணர்வுகளை கட்டுப்படுத்த வேண்டும். நல்லுறவு வளர மென்மையாக நட்புணர்வோடு நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பண இழப்பிற்கான சாத்தியம் உள்ளது. உங்கள் குடும்பத்துக்காக நீங்கள் தேவையின்றி பணம் செலவு செய்வீர்கள். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

அஜீரணக் கோளாறு காரணமாக வயிற்று உபாதை ஏற்பட வாய்ப்புள்ளது. எண்ணெய் மற்றும் கார உணவு வகைகளை தவிர்த்தல் நல்லது.





